அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை

ATC
AUSTRALIAN TAMIL CONGRESS




சித்திரை 2010
ISSN 1837-6460
மலர் 2 இதழ் 4

# தடுப்பு முகாம்களும்.... தமிழ்ப் புத்தாண்டும்...

நன்றி புதினம்



30 வருடகாலப் போர் முடிவுக்கு வர, மலர்ந்திருக்கும் சமாதானத்தினைக் கொண்டாடும் வகையில் பாரம்பரிய பௌத்த சிங்கள-தமிழ் புத்தாண்டு தேசிய விடுமுறை நாளாக நாட்டினது தலைநகர் கொழும்பில் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், வடக்கில் 83,000 க்கும் அதிகமான தமிழ்ப் பொதுமக்கள் தடுப்பு முகாம்களில் தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

30 ஆண்டு காலப் போரின் பின்னர் ஓர் அமைதியான சூழமைவில் நாட்டினது பௌத்த சிங்களவர்களும் இந்து மதத்தினைப் பின்பற்றும் தமிழர்களும் தங்களது புத்தாண்டினைக் கொண்டாடியுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே மே 2009 வரை இடம்பெற்ற கொடூரமான மோதல்களின் திகில் அனுபங்களைச் சுமந்து நிற்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் புதிதோர் சூழமைபில் புத்தாண்டினை எதிர்கொள்கிறார்கள்.

கிறீஸ்தவர்கள், முஸ்லீம்கள் உள்ளிட்ட நாட்டினது ஏனைய சமூகத்தவர்களும் இந்தப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் பங்கெடுத்தார்கள். ஆனால், வடக்கிலுள்ள தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் 83,000 க்கும் அதிகமான தமிழ் பொதுமக்களுக்கு இந்தப் புத்தாண்டும் துன்பம் நிறைந்ததாகவே அமைந்திருக்கிறது.

'கடந்த 10ஆண்டு காலத்தில் புத்தாண்டிற்காக நான் விடுமுறையில் வீட்டுக்குச் செல்வது இதுவே முதன்முறை' என கமல் குமார கங்கந்த என்ற படைவீரர் கூறுகிறார். 'விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் எதுவுமின்றி சிங்கள-தமிழ் புத்தாண்டினைக் கொண்டாடுவதில் நாம் மகிழ்வடைகிறோம்' என அவர் தொடர்ந்தார்.

நாட்டில் நிரந்தர சமாதானம் நிலைக்கவேண்டும் என வேண்டி இந்து ஆலயங்களிலும் பௌத்த கோவில்களிலும் ஏன் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் புத்தாண்டு நாளில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றிருக்கின்றன.

நாட்டினது அனைத்து இன மக்களதும் நலனுக்காகவும் அவர்களது அமைதிக்காகவும் இறைவனைப் பிராத்திப்பதாக புத்தாண்டு நாளில் இடம்பெற்ற சிறப்பு வழிபாட்டில் கலந்துகொண்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

எது அவ்வாறிருப்பினும் நாட்டினது வடக்குப் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருக்கும் 83,000 தமிழர்களது வாழ்வில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் எதுவிதமான மாறுதல்களையும் ஏற்படுத்திவிடவில்லை. விடுதலைப் புலிகளின் மீதான இறுதி யுத்தத்தினை அரச படையினர் முடுக்கிவிட, சனவரி 2009ம் ஆண்டு முதல் இடம்பெயர்ந்த இந்த மக்களை சிறைக் கைதிகள் போலவும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் போலவுமே அரசாங்கம் கருதிச் செயற்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 9 ம் பக்கம்

# மன்னம்பிட்டி தமிழ் கிராமம்: சூறையாடப்படும் நிலம்! தி.வண்ணமதி



மன்னம்பிட்டி பிரதேச சபை, மகாவலி அதிகாரசபை மற்றும் தொடருந்து திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றுபவர்களும் அரசியல் செல்வாக்குள்ள தனி நபர்களும் மன்னம்பிட்டிக் கிராமத்தவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட நிலங்களைச் சட்டத்திற்குப் புறம்பான வகையில் தமதாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாக அறிய முடிகிறது.




மன்னம்பிட்டி கிராமமும், மன்னம்பிட்டி பாலமும் மட்டக்களப்புக்கு செல்லும் தொடருந்து பாதையில் கல்லோயா சந்திக்கும் வாழைச்சேனைக்கும் இடையே உள்ளது.

வரலாற்றுச் சான்றுகளின் படி மன்னம்பிட்டி என்ற இந்த தமிழ்க் கிராமம் 1893ல் உருவாக்கம் பெற்றிருக்கிறது.

தங்களது விவசாயத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் 1897ம் ஆண்டு மகாவலிகங்கையின் கிளை நதியாகிய ஹலராவில ஆற்றினை [Galarawila River] மறித்து மன்னம்பிட்டிக் கிராம மக்கள் குளம் ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள்.

இந்த ஆற்றினை கடக்க கட்டப்பட்டதுதான் மன்னம்பிட்டி பாலம்.

ஆனால் 1948ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது இந்தக் குளம் அழிந்துவிட அதிகாரிகள் இதுவரைக்கும் அந்தக் குளத்தினை மீளக்கட்டவில்லை.

துரித கதியில் மேற்கொள்ளப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்கூட மன்னம்பிட்டிக் கிராம மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடவில்லை. மாறாக, மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்காக இவர்களது கிராம நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் வசித்துவந்த 250 குடும்பங்களில் 120 குடும்பங்களுக்கு வயல் நிலங்களும் இருந்திருக்கிறது.

வெறும் 16 குடும்பங்களுக்கு மாத்திரமே சுவீகரிக்கப்பட்ட காணியில் அதே அளவுடைய வேறு காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏனையோருக்கும் அவர்கள் முன்னர் வைத்திருந்த நிலங்களில் அரைப் பகுதிக்கும் குறைவான காணிகளே வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்தப் பிரதேசத்தினை ஏனைய இனக்குழுமங்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு விவசாயத் தேவைகளுக்காக மாத்திரம் அரை ஏக்கர் வயல்நிலம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம் மன்னப்பிட்டி வாசிகளுக்குச் சென்று சேரவேண்டிய நிலத்தில் பெரும்பகுதியினை மன்னம்பிட்டி பிரதேச செயலகத்தில் பணிசெய்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் சதித்திட்டம் ஒன்று சில வருடங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் விளைவாக மன்னம்பிட்டி என்ற இந்தத் தமிழ்க் கிராமத்திற்கு மிகப் பெரும் அநீதி இழைக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினையில் தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொடர்புடைய அதிகாரிகளும் உடனடியாகத் தலையிட்டு, சட்ட விரோதமான இந்த நில அபகரிப்பினை நிறுத்துவதோடு மன்னம்பிட்டி கிராம வாசிகளுக்கு நிரந்தரமான தகுந்த தீர்வினைப் பெற்றுக்கொடுப்பார்களா? ♦

# குவீன்ஸ்லாந்து மாநில அவை அறிக்கை

**பிரச்சாரச் செயற்பாடுகள்**

நடைபெறும் சித்திரை மாதம் 7ஆம் நாள் 'அகதிகளிற்கான ஒருங்கிணைந்து செயற்படும் குழு' (Refugee Action Collective – RAC ) வினால் ஒழுங்குச செய்யப்பட்ட பொது விவாதக் கூட்டத்தில் எமது அவையின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தின் பிரதான பேச்சாளர் மகேந்திரா அவர்கள் தொழிற்குழு ஒன்றின் செயற்பாட்டாளர் ஆவார். இவர் அகதிகளின் உரிமைக்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டமைப்பு உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியிருந்தார். இவர் ஏற்படுத்திய இக் கூட்டமைப்பு இந்தோனேசியாவில் தனித்துவிடப்பட்ட அகதிகளின் உரிமைக்காக தொடர்ந்தும் குரல் எழுப்பிய வண்ணம் உள்ளது.

மத்திய அரசின் உறுப்பினர் ஒருவரால் ஒழுங்கு செய்யப்பட்ட பலவிதமான கலாச்சார மக்கள் பங்குபற்றிய இராப்போசன விருந்தில் எமது பிரச்சாரச் செயற்குழு உறுப்பினர்களும் பங்காற்றினார்கள். இதன் போது அவர்கள் பல முக்கிய அரசியல் உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நிகழ்த்தினார்கள். இலங்கைத் தமிழர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள், தற்போதைய அவுஸ்திரேலிய அரசின் கொள்கை என்பன இவ்விவாததிதின் முக்கிய புள்ளிகளாக இருந்தன. முடிவாக எமது குழுவினர் செனற்றர் கிறிஸ் இவான்ஸ் இற்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பினார்கள். இக்கடித்தில் இலங்கை அகதிகள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் விளக்கப்பட்டிருந்தது.

எமது அவையினர் தொடர்ந்தும் அவுஸ்திரேலிய அரசியல்வாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு இடம்பெயர்ந்த எமது மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளைப் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

**புலம் பெயர்ந்து தஞ்சமடைந்த தமிழர்களுகு உதவி**

எமது அவை உறுப்பினர்கள் தொடர்ந்தும் புதிதாக வருகை தந்தவர்களை சென்று சந்தித்து அவர்களுக்கு வேண்டைய உதவிகளை செய்து வருகின்றார்கள். ♦

# மேற்கு அவுஸ்திரேலிய மாநில அவை அறிக்கை

**பிரச்சாரச் செயற்பாடுகள்**

சித்திரை மாதம் எமது அவையின் பிரதிநிகளள் குடிவரவுத்திணைக்களத்தின் குடியேற்றத்தினை சீர்ப்படுத்தும் குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்கள். இதில் அவுஸ்திரேலிய அரசு இலங்கை அகதிகளின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை தற்காலிகமாக நிறுத்த எடுத்த முடிவைப் பற்றிய விவாதம் நடைபெற்றது. இதில் இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடமாகியும் எமது மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் விளக்கி, அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட இந்தத் திடீர் முடிவில் மீதான எமது மக்களின் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

**புலம் பெயர்ந்த மக்களுக்கான உதவி**

எமது அவை உறுப்பினர்கள் தொடர்ந்தும் புதிதாக வருகை தந்தவர்களை சென்று சந்தித்து அவர்களுக்கு வேண்டைய உதவிகளை செய்து வருகின்றார்கள்.

எதிர்வரும் வைகாசி மாதம் 15ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரையான வாரம் கடந்த வருடம் முடிவடைந்த யுத்ததில் இறந்த மக்களை நினைவுகூரும் வாரமாகப் எமது மாநிலத்தில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வார முடிவில் 22ஆம் நாள் மாலை ஒரு நினைவஞ்சலிக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.♦

# தென் அவுஸ்திரேலிய மாநில அவை அறிக்கை

எமது மாநிலத்தின் அவையினரின் சித்திரை மாதம் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.
கடந்த மாதம் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மக்களை சந்திக்கும் ஒரு கூட்டம் அவுஸ்திரேலிய அரசினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிழ்ச்சி நடைபெற்ற போது, இந்தோனேசியாவில் அல்லலுறும் எமது தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை விளக்கி அவுஸ்திரேலிய பிரதம மந்திரி, குடிவரவுத் திணைக்கள் மந்திரி, தெற்கு அவுஸ்திரேலியாவின் முதல்வர் ஆகியோறிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டது.

'நண்பர்களின் வட்டத்தினால்' (Circle of Friends ) 'அரசியல் தஞ்சம் கோருபவர்களை' விவாத மையமாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட பொது விவாதக் கூட்டத்தில் எமது அவையினரின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதில் சிறப்பு பேச்சாளராக 'கிறீன்ஸ்' அரசியல் குழுவைச் சேர்ந்த செனற்றர் சாரா கான்சன்-யங் கலந்து கொண்டார். இதேபோல் இன்னொரு கூட்டத்தில் குறைவான வருமானம் உள்ள புலம் பெயர்ந்த மக்களின் பிரச்சனைகள் ஆராயப்பட்டது. எமது அவையின் சார்பில் எங்களாலான உதவியை உலகின் எல்லா நாடுகளிலுமிருந்து வந்த அகதிகளிற்கு வழங்க சம்மதித்தோம்.

கடந்த மாதம் எமது அவையின் பிரதிநிகளும் இலங்கைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களும் இணைந்து குடிவரவுத்திணைக்களத்தின் குடியேற்றத்தினை சீர்ப்படுத்தும் குழுவின் மேலாளரைச் (Miss Justin Hugo ) சந்தித்தோம். இச்சந்திப்பில் தமிழ்க் குடியேற்றவாசிகளிற்கான வேலைவாய்ப்புப் பற்றியும் மற்றைய சமூகத்தினர்கள் மேற்கொண்ட முயற்சிகள் என்பன பற்றியும் ஆராயப்பட்டது.

அவுஸ்திரேலிய தென்மாநில வாக்கெடுப்பை வாழ்த்தி எமது அவையினர் கடிதங்கள் அனுப்பினார்கள். இக்கடிதத்தில் எமது நாட்டி நிலைமையினை விளக்கியது மட்டுமல்லாமல் 'உலகத் தமிழர் பேரவை' யினால் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையும் இணைக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் (பங்குனி) 21ஆம் நாள் மெல்பேணில் வைத்திய கலாநிதி சாம் பரியினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் எமது அவையின் இளைய தலைமுறையைச் சேர்ந்த இருவர் கலந்து கொண்டனர்.

அத்துடன் எதிர்வரும் வைகாசி மாதம் 15ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரையான வாரம் கடந்த வருடம் முடிவடைந்த யுத்ததில் இறந்த மக்களை நினைவுகூரும் வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இந்த வாரத்தில் பின்வரும் 3 நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

1. 2010 வைகாசி 15 – மர நாட்டுவிழா
2. 2010 வைகாசி 21 – மெழுகுதிரி ஏத்திய அஞ்சலிக் கூட்டம்
3. 2010 வைகாசி 22 – அனைத்து சமூகத்தினருடனான நினைவுக் கூட்டம் ♦

## நியூ சவுத்வேல்ஸ் மாநில அறிக்கை

தொடர்கின்றது...

அவையினரிற்கும் அழைப்பும் இருவரிற்க்கு இலவச அனுமதியும் கிடைத்தது. இதில் பல பாராளுமன்ற உறுப்பினர்களும், செய்தியாளர்களும் பங்குபற்றியிருந்தனர். இந்நிகழ்விற்க்கு எமக்கு அழைப்பு வழங்கிய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கு எமது அவையின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றோம்.

### கிறிஸ்துமஸ் தீவு

குடிவரவுத் திணைக்களத்தின் உதவியுடன் எமது அவையின் பிரதிநிதி ஒருவர் கிறிஸ்துமஸ் தீவிற்கு பார்வையிடச் சென்று வந்தார். அத்தீவில் இருக்கின்ற எமது மக்கள் தம்மை பார்வையிடச் சென்றவரை வரவேற்று தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.♦

# நியூ சவுத் வேல்ஸ் மாநில அவை அறிக்கை

**அடக்குமுறைக்கெதிரான ஒன்று சேரல்**

'சீலா ஓற்றோனொமிஸ்ரா வுமின்ஸ்' 2010இற்கான நிகழ்வு இம்முறை சிட்னியில் நடைபெற்றது. அடக்குமுறைக்கெதிரான ஒன்றுகூடல் எனப் பெயரிடப்பட்ட இந்நிகழ்ச்சியில் எமது அவையின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர். இதில் உரையாற்றிய எமது அவையின் பிரதிநிதி எமது மண்ணில் பெண்களும் குழந்தைகளும் எதிர் நோக்கும் துன்பங்களை எடுத்துக்கூறினார்.

**பிரச்சாரச் செயற்பாடுகள்**

அவுஸ்திரேலிய அரசின் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மக்களை சந்திக்கும் ஒரு கூட்டம் நியூ சவுத்வேல்ஸ் எப்பிங்கில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிழ்ச்சியில் பங்கேற்ற 'பெண் உரிமைகளுக்கான குழு' வின் அங்கத்தவர்கள் பிரதம மந்திரியிடம் தற்போதைய அரசின் அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களுக்கான கொள்கை மாற்றம் பற்றிக் கேள்வி எழுப்பினார்கள். இக்கேள்வி நேரத்தின் போது, தமிழர்கள் இலங்கையில் எதிர் நோக்கும் அடிப்படைப் பிரச்சனைகளும் அவர்கள் இலங்கையை விட்டு தப்பியோடும் காரணங்களும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்தோடு அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை அரசிற்க்கு எதிராக ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவையும் எடுத்துக் கூறப்பட்டது.

**அரசியல் ஆலோசகர்களுடனான சந்திப்பு**

எமது அமைப்பின் அங்கத்தவர்கள் தொடர்ந்தும் அரசியல்வாதிகளையும் அரசியல் ஆலோசகர்களையும் சந்தித்து எமது மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை எடுத்துக்கூறி வருகின்றோம். இந்த மாதம் நாங்கள் வெளிவிவகாரங்களிற்கான அரசியல் ஆலோசகர் திரு. ஜஸ்ரின் ஸ்ரேற்ஸ் அவர்களையும் துணைப் பிரதம மந்திரி மதிப்பிற்குரிய ஜுலியா கில்லாட்ஸ் அவர்களையும் தனித்தனியாக சந்தித்தோம்.

துணைப் பிரதம மந்திரி மதிப்பிற்குரிய ஜுலியா கில்லாட்ஸ் அவர்கள் பாராளுமன்றத்தில் எமது மக்களை பற்றி உரை நிகழ்த்தியதிற்க்கு நன்றி கூறிய நாம், அவரால் கூறப்பட்ட சில கருத்துக்களைப் பற்றி எமது அதிருப்தியையும் தெரிவித்தோம். மேலும் இரு வாரங்களிற்க்கு முன்னர் நடைபெற்ற இலங்கைத் தேர்தல் பற்றியும் அதைப்பற்றி 'சுதந்திரத் தேர்தலுக்கான ஆசிய வலைப்பின்னலின்' அறிக்கையைப்பற்றியும் கலந்துரையாடினோம்.

வெளிவிவகாரங்களிற்கான அரசியல் ஆலோசகர் திரு. ஜஸ்ரின் ஸ்ரேற்ஸ் அவர்களின் வேண்டுகோளிற்கேற்ப நாம் எமது மக்களைப் பற்றிய செய்தித்துளிகளை தொடர்ந்தும் அனுப்பி வருகின்றோம்.

குடிவரவுத் திணைக்களத்துடனான சந்திப்பு அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம் எமது அவையுடன் தொடர்பு கொண்டு ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தியது. இந்தச் சந்திப்பில் குடிவரவுத் திணைக்களத்தின் மூத்த உறுப்பினர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். இந்தச் சந்திப்பில் நாம் அமெரிக்காவின் அறிக்கையயையும், ஆசிய மனித உரிமைகளிற்கான குழுமத்தின் அறிக்கையையும் மேற்கோள்காட்டி தமிழர்கள் இலங்கையில் எதிர் நோக்கும் பிரச்சனைகளை மீண்டும் வலியுறுத்திக் கூறினோம். மேலும் எமது குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் நாம் அனுப்பும் செய்திகளையும், பக்கச்சார்பற்ற அறிக்கைகளையும் கருத்தில் கொள்ள சம்மதித்தார்கள்.

இனவாத 'அவுஸ்திரேலியாவைப் பாதுகாக்கும் கட்சி' விலாவூட் தடுப்பு முகாமிற்கு அதிரில் ஒரு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ஒழுங்குபடுத்தியிருந்தது. இதற்க்கு எதிராக ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தில் எமது அவையின் உறுப்பினர்கள் பங்கு பற்றினார்கள். இதில் எமது அவை சார்பாக உரையும் நிகழ்த்தினார்.

கடந்த 11ஆம் நாள் 'பச் வேர்க்ஸ்' ஒழுங்குபடுத்திய 'அஞ்சனயம்' நாடக நிகழ்விற்க்கு எமது

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# உலகத் தமிழர் பேரவையின் பார்வையில் சிறீலங்காத் தேர்தல்

உலகத் தமிழர் பேரவை: ஏப்பிரல் 24, 2010

ஏப்பிரல் 8 அன்று சிறீலங்காவில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலானது அத்தீவில் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு தேர்தலாகவே உலகத் தமிழர் பேரவை நோக்குகின்றது. இராணுவமயமாக்கப்பட்டு ஒடுகக் முறையின் கீழ் வாழும் தமிழ் மக்கள் பல்வகைச் சொல்லொணாத் துயர்களுக்கு நடுவில் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளற்ற நிலையில் சுதந்திரம் மறுக்கப்பட்டு அச்சுறுத்தல்களுக்கிடையே தொடர்ந்தும் வாழ்கின்றனர். 100,000 வரையான தமிழர் இன்னமும் இராணுவ வதை முகாம்களில் உரிமைகள மறுக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். ஆயிரக்கணக்கான தமிழருக்கு இத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் மிகக் குறைவானவர்களே வாக்களித்து உள்ளமையானது அச்சம், நம்பிக்கையின்மை, தேர்தல் மீதான வெறுப்பு ஆகிய மிகத் தெளிவான காரணங்களையும் சிறீலங்காவில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பெரும்பான்மை இனம்சார்ந்த மக்களாட்சி முறையிலும் அதன் தேர்தல் முறையிலும் அவர்களுக்கு சிறிதளவும் நம்பிக்கையில்லை என்ற செய்தியை அனைத்துலகச் சமூகத்துக்குக் தெளிவாகக் தந்துள்ளது. சிறீலங்கா அரசானது அங்கு நடப்பது மக்களாட்சியேயென நியாயப்படுத்தி அனைத்துலகச் சமூகத்தை ஏமாற்றும் பொருட்டே அடக்குமுறையும் இராணுவ ஆக்கிரமிப்புமுள்ள இச்சூழலில் இத்தேர்தலைத் தமிழ் மக்கள் மீது திணித்துள்ளது.

எனினும், இத்தேர்தலிற் பங்குபற்றிய தமிழ் மக்கள் அவர்களது நியாயமான அரசியல் வேட்கைகளுக்காகக் குரல்கொடுத்து வருகின்ற அரசியற் கட்சியான தமிழர் தேசியக கூட்டமைப்பைத் தெரிவுசெய்துள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட த.தே.கூட்டமைப்பு உறுப்பினருக்கு வாழ்த்துத் தெரிவிக்கையில் உலகத் தமிழர் பேரவைத் தலைவராகிய வண. முனைவர் எஸ்.ஜெ. இமானுவேல் அடிகளார் பின்வருமாறு கூறியுள்ளார்: “ தமிழ் மக்கள் இத்தேர்தல் மூலம் இரண்டு செய்திகளைத் செமன் மயாகத் தெரிவித்துள்ளனர்: ஒன்று, தம்மீது திணிக்கப்பட்ட சிறிலங்காவின் அரசியல் முறையில் தமக்கு நம்பிக்கையில்லை என்பது. மற்றையது, தமது விடுதலைக்காகக் குரல் கொடுத்த கட்சியைத் தெரிவு செயத் தன் மூலம் தமது விடுதலை வேட்கையை வெளிப்படுத்தியுள்ளது.” மேலும், “ தமிழரது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதிலும் அவர்களது அரசியல் வேட்கைகளை வென்றெடுப்பதிலும் த.தே. கூடட் ணியுடன் உலகத் தமிழர் பேரவையானது நெருக்கமாக இணைந்து செயற்படும்” எனவும் அவர் கூறினார்.

இத்தேர்தல் ஏற்படுத்தியிருக்கக் கூடிய வேற்றுமைகளை மறந்து விடுதலை என்ற பொது நோக்கை எய்த அனைத்துத் தமிழரும் ஒன்றுபட வேண்டுமென உலகத் தமிழர் பேரவை வேண்டிக்கொள்கின்றது. அத்தோடு, இலங்கைத் தீவிலுள்ள மக்கள் அனைவரும் சுதந்திரத்துடனும் மேன்மையுடனும் அமைதியாக அருகருகே வாழ வழிசெய்யும் வகையில், புலம் பெயர்ந்து வாழும் அனைத்துத் தமிழரும் அவர்களது அமைப்புகளும் ஒற்றுமையோடு ஒன்றுசேர்ந்து அனைத்துலக நிறுவனங்களுடனும் அரசுகளுடனும் ஈடுபட்டு ஓர் அரசியல் தீர்வைக் காணச் செயலாற்ற வேண்டுமெனவும் உலகத் தமிழர் பேரவை வேண்டிக்கொள்கின்றது ♦

ஊடகத் தொடர்பு:

தொ.பே. 44 (0) 7958 590 196

மின்னஞ்சல்: surensurendiran@globaltamilforum.org

உ.த. பேரவை பற்றி:

உலகத் தமிழர் பேரவையானது உலகளாவிய தமிழ் அமைப்புகளின் ஒரு கூட்டமைப்பாகும். பேரவை உறுப்பினர், நலன் விரும்பிகள் ஆகியோரினதும் அனைத்துலக அரசுகள், நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றிலுள்ள முக்கிய முடிவெடுப்பவர்கள் ஆகியோரினதும் அறிவையும் திறமைகளையும் ஒன்று திரட்டி, சிறீலங்காவில் இன்னலுறும் தமிழரது துயர்போக்கவும அவர்களது தன்னாட்சி உரிமையை முன்னெடுப்பதற்கு அனைத்துலகச் சட்டங்கள், அவற்றின் கூட்டு ஒப்பந்தங்கள், பொதுவிணக்க ஒப்பந்தங்கள் ஆகியவற்றிலுள்ள மக்களாட்சிக்குரிய சட்ட வரம்புகளுக்கமைய உழைத்து வருகின்றது. இப்பேரவை 2009 இல் அனைத்துலகத் தமிழ்ச் சமூக அமைப்புகளின் உதவியோடு தொடங்கப்பட்டது. ஏமது நோக்கம் மற்றும் குறிக்கோள் ஆகியனவற்றை அறியத் தயவுசெய்து info@globaltamilforum.org உடன் தொடர்புகொள்ளவும் அல்லது www.globaltamilforum.org ஐ பார்க்கவும்.

## பிரபாகரனின் சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன் சிறப்பு பேட்டி

விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மூத்த சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன். இவர் டென்மார்க்கில் மனைவி, பிள்ளைகளுடன் வசித்து வருகிறார்.

இவர் இணையதளம் ஒன்றுக்கு சிறப்பு பேட்டி அளித்துள்ளார்.

**நீங்கள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

நானும் மனைவியும், இரண்டு பிள்ளைகளும் டென்மார்க்கில் வாழ்ந்து வருகிறோம். வேலையும் வாழ்வுமாக நாட்கள் நகருகின்றன.. மற்றப்படி சொல்வதற்கு எதுவும் இல்லை. எல்லோரையும் போலவே எனது வாழ்வு நகர்கிறது.

நீங்கள் பிரபாகரனின் சொந்த அண்ணன். உங்களுக்கு ஓர் உரிமை இருக்கிறது. அதிகாரத்தில் சகோதரன் இருந்தால் அண்ணனுக்கு இயல்பாகவே அதிகாரம் வந்துவிடும். அதோ பாருங்கள் சிங்கள ஆட்சியை... கோத்தபாய ராஜபக்ஷ, பசில்ராஜபக்ஷ போன்றவர்களுக்கு எங்கிருந்து அதிகாரம் வந்தது.. அதுபோல நீங்களும் ஏன் அதிகாரத்தை பெற முயற்சிக்கவில்லை..?

எனது தம்பி பிரபாகரன் போராட்டத்தை தமிழ் மக்களின் தேசிய சொத்தாக கருதினார். அங்கு குடும்பம், தாய், தந்தை, அண்ணன் என்ற பேச்சுக்கே இடமில்லை. எந்தவித அதிகார துஷ்பிரயோகங்களும் செய்யாமலே என் தந்தை போலவே தம்பியும் நேர்மையின் வடிவாக வாழ்ந்து காட்டியுள்ளார். அவருக்கு அண்ணனாக வாழ்வது மிகவும் கடுமையான ஒரு யாகம் என்றே கூறுவேன்.

தம்பியின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாத ஓர் அண்ணனாக வாழ்வதுதான் சிறந்த வாழ்வென்று கருதி வாழ்ந்தேன். தம்பி என்பதற்காக தேசத்திற்கு சொந்தமான வாகனத்தில் நாம் ஏறி பயணிக்க முடியாது. தம்பியின் அதிகாரத்தை பயன்படுத்தாது நாம் நமது சொந்தக் கால்களிலேயே நடந்தோம். தம்பி போராட்டத்தில் இருந்த ஆரம்ப காலங்களில் எங்களோடு உறவு கொள்ளவே மற்றவர்கள் பயந்தார்கள்.

எனது தாயும் தந்தையும் பொலிகண்டி கந்தவன ஆலய மடத்தில் படுத்து வாழ்ந்த காலங்கள் உண்டு. தங்கள் வீட்டைத் தாண்டிப் போனால் ராணுவத்தால் ஆபத்தென்று கூறி போகக் கூடாது என்று கூறியவர் பலர் உண்டு. ஆனால் தம்பியின் ஆட்சி வந்தபோது அவர்கள் வரவேற்றனர். அப்போதும் நாங்கள் பழையதை மறவாது வாழ்ந்தோம்.

பிரபாகரனின் ஒழுக்கத்திற்கு உரிய தியாக வாழ்வை என் தந்தையும் தாயும் வாழ்ந்தார்கள். நானும் அவ்வழிதான் நடந்தேன், என் தம்பி குடும்பம் என்று தனியாக எங்களை கவனித்ததே கிடையாது.



**குடும்பம் – போராட்டம் இரண்டும் வேறுவேறான சங்கதிகள் இவைகளுக்குள் பிரபாகரனின் பணி எப்படி நகர்ந்தது என்பதைக் கூற முடியுமா ?**

ஓர் சிறிய உதாரணத்தைக் கூறுகிறேன். ஒரு தடவை என் தம்பியின் மகன் சாள்ஸ் தனக்கு ஒரு விளையாட்டு பொருள் வேண்டும் என்று கேட்டார். அதற்கு பதில் கொடுத்த பிரபாகரன், நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி தனக்கு இதுவரை வாழ்க்கைக்கு ஆதாரமான மாதச் சம்பளத்தை வழங்கவில்லை, அதனால் விளையாட்டு பொருளை வேண்ட முடியவில்லை என்று பிள்ளையை சமாதானம் செய்தார்.

தனது பிள்ளைக்கு ஒரு விளையாட்டுச் சாமானை வாங்கக் கூட அவர் போராட்டத்தில் தனக்கிருந்த அதிகாரத்தையோ பாவித்தது கிடையாது, என் தம்பியும் தந்தை போலவே எளிமையான வாழ்வையே வாழ்ந்தார்.

**அவர் அவ்வளவு நேர்மையாக இருந்தாலும், வெளிநாடுகளில் அவர் பெயரில் இங்குள்ளோர் நடத்திய**

தொடர்ச்சி 11 ம் பக்கம்

**பிரபாகரனின் சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன் சிறப்பு பேட்டி** … தொடர்கின்றது.

**நிர்வாகங்கள் பற்றி எல்லோருக்கும் தெரியும் இவை குறித்து உங்கள் தம்பிக்கு ஏன் அறிவிக்கவில்லை ?**

உண்மைதான், நான் வாழ்ந்த டென்மார்க்கில் நடந்த சம்பவங்கள் பலதை ஆதாரத்துடன் எழுதி வன்னியில் வாழ்ந்த என் தந்தையிடம் அனுப்பி, தம்பியிடம் கொடுக்கும்படி கூறினேன். நான் அனுப்பிய கடிதம் கிடைத்ததும் என் தந்தை வேலுப்பிள்ளை ஒரு வேலை செய்தார். அந்த முறைப்பாட்டுக் கடிதத்தை திறந்து பார்க்காமலே எனக்கு திருப்பி அனுப்பினார்.

உடைக்கப்படாத அக்கடிதத்தின் மேல் உறையில் ஒரு குறிப்புரை எழுதி இருந்தார். நான் அவருடைய தந்தை, நீ அவருடைய அண்ணன். நாம் இருவரும் குடும்பத்தவர், தியாகமே வடிவான ஒரு போராட்டத்தில் உறவு முறை என்ற காரணத்தை பயன்படுத்தி யாதொரு தாக்கத்தையும் செய்தல் கூடாது என்று சுட்டிக் காட்டியிருந்தார். அதே கடிதம் என் தந்தையாரிடம் இருந்து பிரபாகரனுக்கு போயிருந்தால் அவர் அதைவிட நீண்ட குறிப்புரையுடன் உடைத்துப் பார்க்காமலே எனக்கு திருப்பி அனுப்பியிருப்பார். இதுதான் அண்ணன் – தம்பி – தந்தை என்ற எங்கள் முக்கோண உறவுப் போராட்டத்தின் பரிமாணம். இந்த நேர்மையும், ஒழுக்கமும் என் தந்தையின் பாரம்பரியத்தால் வந்தது.

**சமீபத்தில் உங்கள் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை மரணமடைந்தார். அவருடைய மரணத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

எனது தந்தையார் மரணம் மர்மமாக உள்ளது. புதுமாத்தளனில் இறுதி நேரம் நடந்தது என்னவென்ற உண்மைகள் பல அவருக்கு தெரிந்திருக்கும். தான் அறிந்த உண்மைகளை யாருக்கும் மறைக்கும் பழக்கம் உடையவர் அல்ல அவர். எத்தனையோ உண்மைகளை எடுத்துச் சொல்லக்கூடிய போரின் சாட்சியமாக அந்த மண்ணிலேயே வாழ்ந்தவர். அவருடைய குரல் உலகின் முன் வெளிவர முடியாதபடி அமுக்கப்பட்டுவிட்டது. அவர் இறந்த காரணத்தால்தான் அவர் எங்கே வைக்கப்பட்டிருந்தார் என்ற உண்மை தெரியவந்தது. இல்லாவிட்டால் அவர் இறக்கும்வரை எங்கிருக்கிறார் என்பது பற்றிய மர்மம் மேலும் பல காலம் நீடித்திருக்கும். மேலும் அவர் எங்கு சென்றாலும் தனது முக்கிய ஆவணங்களையும், குறிப்புக்களையும் சிறிய பையில் வைத்து கையோடு கொண்டு செல்வார். புதுமாத்தளனில் கூட அவர் அதை எடுத்தபடியே வந்திருக்கிறார் ஆனால் இன்றுவரை அவருடைய முக்கியமான ஆவணங்களைக் கூட நாம் பெற முடியவில்லை.

**இங்கிருந்து உங்கள் தந்தையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அனுபவங்கள் உண்டா ?**

வன்னியில் இருந்து அடிக்கடி என்னுடன் பேசுவார். கடந்த ஆண்டு தை மாதம் நிலமை மோசமடைந்தது. அதற்கு முன்னர் கடைசியாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தொடர்பு கொண்டார். அப்போது நிலமை மிகவும் மோசமடைந்துவிட்டதாக தெரிவித்தார். ஓரளவு நிலமை சீருக்கு வர தொடர்பு கொள்வதாகக் கூறியிருந்தார். பின்னர் அவருடைய மரணச் செய்திதான் இணையத்தில் வெளியாகியிருக்கக் கண்டோம். அவர் உயிருடன் இருந்திருந்தால் உலகத்தின் எத்தனையோ பதிலற்ற கேள்விகளுக்கு ஒழுங்கான பதில் கிடைத்திருக்கும்.

உங்கள் தந்தையார் தன் கருத்துக்களை சுதந்திரமாக சொல்லும் ஒருவராகவே இருந்தார். பிரபாகரன் வன்னியில் நடத்திய ஆட்சி பற்றிய அவருடைய கருத்து என்னவாக இருந்தது.

அதை அறிவதற்கு சிறிது காலம் முன்னர் செல்வது அவசியமாகும். எனது தந்தை டி.எல்.ஓ வாக பணி புரிந்த காலத்தில் முத்தையன்கட்டு குடியேற்றத் திட்டம், வன்னி படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம் போன்றவற்றை ஆரம்பித்தவரில் அவரும் ஒருவராக இருந்தார். அப்போது காணிகளை வழங்குவது அவர்தான்.

படித்த தமிழ் வாலிபர்களை அங்கு குடியேற்றுவதற்கு அவர் இரவு பகலாக போராடினார். அங்கு தமிழ் வாலிபர்கள் குடியேறாவிட்டால் அந்த இதய பூமியை சிங்களக் குடியேற்றமாக மாற்ற விரும்புவதாக அரசு அவரிடம் கூறியிருந்தது. அதைத் தொடர்ந்து எனது தந்தை பழைய வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான

தொடர்ச்சி 11 ம் பக்கம்

**பிரபாகரனின் சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன் சிறப்பு பேட்டி** ... தொடர்கின்றது.

வவுனியா செல்லத்தம்பு, உடுப்பிட்டி இராஜலிங்கம் போன்றோருக்கு விசயத்தை விளங்கப்படுத்தி படித்த தமிழ் வாலிபர் குடியேற்றங்களை வன்னி நோக்கி நகர்த்தும்படி வலியுறுத்தினார்.
ஈழத்தை மீட்பதென்பது ஈழ மண்ணில் தமிழன் பரந்து வாழ்வதால்தான் தீர்மானமாகும் என்றும் கருதினார்.
ஆனால் அன்று அவர் நினைத்தது போல பெருந்தொகையாக வன்னியின் வெற்றிடங்களை நோக்கி மக்களை நகர்த்த முடியாது போன கவலை அவருக்கு இருந்தது.
பின் என் தம்பி பிரபாகரன் அதை ஒரு குறுங்காலத்தில் செய்து, வன்னியில் ஒரு அழகான தமிழீழ அரசையே சகல படைபலங்களோடும் உருவாக்கியபோது என் தந்தை பெரு மகிழ்ச்சி கொண்டார். வன்னியில் நடைபெற்ற நிர்வாகம் அவருக்கு பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது. கிளிநொச்சியின் சிறப்பைக் கண்டு அவர் பெருமகிழ்வடைந்தார். அன்று தான் பார்த்த கிளிநொச்சிக்கும், பிரபாகரன் காலத்து கிளிநொச்சிக்கும் பெரிய வேறுபாடு இருந்ததாக போற்றினார். தன்னால் முடியாத விசயத்தை பிரபாகரன் சிறப்பாக செய்ததாக போற்றினார்.

**அனுராதபுரத்தில் உங்கள் தந்தை வாழ்ந்த காலம், எல்லாளன் சமாதி , உங்கள் தம்பியின் பிறப்பு இவைகள் பற்றி ஒரு கதை உள்ளது. அதுபற்றி என்ன கூறுகிறீர்கள்..**

அனுராதபுரத்தில் எல்லாளன் சமாதி இருந்த இடம், பாழடைந்த கோயில் இவற்றுக்கு அருகால் போகும் வீதியில்தான் எங்கள் வீடு இருந்தது. அந்த இடம் அன்று முற்றிலும் அமைதி நிறைந்த பகுதியாக இருந்தது. இனம்புரியாத ஓர் அமைதி அங்கு நிலவும்.
சுமார் இரண்டாயிரம் வருடங்களாக சிங்கள மக்கள் எல்லாளன் சமாதிக்கு விளக்கேற்றி வருகிறார்கள். அந்த விளக்கு ஈட்டி போல எரியும். அதைப் பார்க்கும்போது மாமன்னன் மறத்தமிழன் எல்லாளனே அங்கு அருவமாக வாழ்வது போன்ற பிரமையும், மதிப்பும் ஏற்படும்.
அத்தகைய உணர்வுகளை என் தந்தையும், தாயும் மனதில் தாங்கி வாழ்ந்த காலத்தில் அதே எல்லாளன் சமாதி இருந்த இடத்தில் கருவுற்றார் பிரபாகரன்.
என் தம்பியின் வாழ்வைச் சீர்தூக்கிப் பாருங்கள், எல்லாளன் போலவே அவர் தமிழ் மீது காதல் கொண்ட ஒருவராக வாழ்ந்த வாழ்வு புரியும்.

தொடரும்...

## தடுப்பு முகாம்களும்.... தமிழ்ப் புத்தாண்டும்...

தொடர்கின்றது...

மீளக்குடியேறுபவர்கள் தங்களது வதிவிடங்களைத் திருத்தியமைப்பதற்கு வழங்கப்படும் 25,000 ரூபாய் பணத்தினைத் தொடர்ந்தும் வழங்குவதற்குப் போதிய நிதி அரசாங்கத்திடம் இல்லை என அகதிகளுக்கான ஐ.நாவின் உயர் ஆணையம் கூறுகிறது.

போர் மேகங்கள் அகன்ற, அமைதியானதொரு சூழலில் புதுவருடம் கொண்டாடப்படுகிறது என்ற தோற்றப்பாட்டினை அரசியல் வாதிகளும் ஊடகங்களும் ஏற்படுத்தி வருகின்றன என National Fisheries Solidarity Movement என்ற அமைப்பின் பொறுப்பாளரும் கத்தோலிக்க மதத் தலைவருமான கேமன் குமார தெரிவிக்கிறார்.

'நாங்கள் எல்லோரும் ஒரு தேசியத்தினைச் சேர்ந்த மக்களே என்பதை மனதிற்கொண்டு செயற்படுவதற்கு நாம் தவறிவிட்டோம். மரங்களின் கீழ் வாழும் அந்த மக்களையும் எங்களது நாட்டினது குடிமக்களாக நாம் ஏற்றுக்கொள்ளவில்லை? அவர்களையும் எங்களில் ஒருவராக நாம் ஏன் கருதிச் செயற்படக்கூடாது? என்கிறார்' கேமன் குமார.

'சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையேயான இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்குகான ஒரு சிறந்த சந்தர்ப்பத்தினை சிங்கள தமிழ் புத்தாண்டு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. வெறும் வெற்று வார்த்தைகளை மாத்திரம் வெளியிடாது, இன நல்லிணக்கம் என்ற பாதையில் பொறுப்புடன் பயணிப்பதற்கு அரசியல் தலைமைகள் தவறிவிட்டன' என கிறிஸ்தவ மதகுருவான அன்ரனி கூறுகிறார்.

Australian Tamil Congress
அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை

# அவுஸ்திரேலியத் தமிழர் பேரையின் முதலாவது ஆண்டு பொதுக்கூட்டம்

*மாநில அவையின் பொதுக்கூட்டம் நாடளாவிய ரீதியில் 26 ஆம் நாள் ஆனி 2010 அன்று நடைபெறுகின்றது*

ஒவ்வொரு மாநில அவையும் ஒரு நிர்வாகக் குழுவைத் தெரிந்தெடுக்க வேண்டும்: தலைவர், உப-தலைவர், செயலாளர், பொருளாளர், ஊடகத் தொடர்பாளர், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், நாடளாவிய நிர்வாகக் குழுவிற்கான மாநிலப் பிரதிநிதி

**நியூ சவுத் வேல்ஸ்**: ரெட் கம் சென்ரர், 2, லேன் ஸ்றீற், வென்றவேர்த்வில், நியூ சவுத் வேல்ஸ்2145, நேரம்: மாலை 5:30

**குவீன்ஸ்லான்ட்**: மேசனிக் ரெம்பில், 671, செவின்ரீன் மைல்ஸ் றொக் றோட், சினமன் பார்க், குவீன்ஸ்லான்ட்4073, நேரம்: மாலை 6:00

**தெற்கு அவுஸ்திரேலியா**: பேர்ண்சைட் கொம்முனிற்றி சென்ரர், 401, கிறீன்கில் றோட், ரஸ்மோர், தெற்கு அவுஸ்திரேலியா 5065, நேரம்: மாலை 4:30

**விக்டோரியா**: சென்ற். ஜுட் கொம்முனிற்றி சென்ரர், 51, ஜோர்ச் ஸ்றீற், ஸ்கோர்ஸ்பை, விக்டோரியா 3179, நேரம்: காலை 10:00

**மேற்கு அவுஸ்திரேலியா**: இலங்கைத் தமிழ்ச் சங்கம் மண்டபம், 6, தேட் அவெனியு, றொஸ்மோய்ன், மேற்கு அவுஸ்திரேலியா 6148, நேரம்: காலை 11:00

## அவுஸ்திரேலியத் தமிழர் பேரையின் முதலாவது ஆண்டு பொதுக்கூட்டம் - 17 ஆடி 2010

இக்கூட்டத்தில் பேரவையின் தலைவர்-உபதலைவர் தேர்வும், அவையின் சட்ட அமைப்பிலான மாற்றங்களும் இடம்பெறும்

இடம்: சென்ற். ஜுட் கொம்முனிற்றி சென்ரர், 51, ஜோர்ச் ஸ்றீற், ஸ்கோர்ஸ்பை, விக்டோரியா 3179,
நேரம்: மாலை 2:00

**அனைத்து தமிழர்களினதும் ஒருங்கிணைந்த குரல்**
www.australiantamilcongress.com
1300 660 629




## ATC

## ACT Chapter Launch

## Canberra Launch

Our vision

Freedom, Equality and Protection for All Tamils

The strength of ATC lies in the support it receives at the grass root level

Please join us in our crusade for Peace and Justice

on

*9 May 2010 (Sunday)*

*3.00pm—5.00pm*

*Canberra Tamil Senior Citizens Hall*

*11 Bromby Street, Isaacs*

Unified Voice for All Tamils

www.australiantamilcongress.com

Email-info@australiantamilcongress.com

1300 660 629

## அவுஸ்திரேலியத் தமிழர் கருத்துக்கணிப்புப் பேரவை அறிக்கை

அருமை நண்பர்களே,
1976 ஆம் ஆண்டு வரையப்பட்டு, பெரும்பான்மை தமிழர்களால் சாதகமாக வாக்களிக்கப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு சித்திரை மாதம் அவுஸ்திரேலியாவிலும் இடம்பெற்றது. இந்த வாக்கெடுப்பில் பெருந்தொகையாகக் கலந்து கொண்ட அவுஸ்திரேலியா வாழ் ஈழத்தமிழர்களில் 99.38% ஆனோர் 'ஆம்' என சாதகமாக வாக்களித்துள்ளார்கள்.

இந்த வாக்கெடுப்பின் உத்தியோகபூர்வமான முடிவுகள் சித்திரை மாதம் **22ஆம் திகதி மாலை 2.30 மணியளவில் நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்ற கட்டடத்தில்** இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| **மொத்த வாக்காளர்கள்:** | 8272 |
| **செல்லுபடியாகாத வாக்குகள்:** | 67 |
| **செல்லுபடியான வாக்குகள்:** | 8205 |
| **சாதகமான (ஆம்) வாக்குகள்:** | 8154 |
| **சாதகமான (ஆம்) வாக்குகள்:** | 99.38% |
| **சாதகமற்ற (இல்லை) வாக்குகள்:** | 51 |
| **சாதகமற்ற (இல்லை) வாக்குகள்:** | 0.62% |

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பே அவுஸ்திரேலியாவின் வரலாற்றில் வெற்றிகரமாகவும் நியாயமாகவும் நிகழ்த்தப்பட்ட தமிழ் அரசியல் நிகழ்ச்சியாக அமைந்திருக்கின்றது.

இத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்காக அயராது உழைத்த எல்லோரிற்கும் எமது பேரவை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. உங்கள் எல்லோருடைய உதவியே எமது வெற்றிக்கு துணை போனது என்றால் அது மிகையாகாது.

நன்றி.
நிர்வாகக்குழு
அவுஸ்திரேலியத் தமிழர் கருத்துக்கணிப்புப் பேரவை

## இந்திய நடிகர் அமிதாப் பச்சன் வீட்டுக்கு முன் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

இந்தியாவின் புகழ்மிக்க இந்தி நடிகர் அமிதாப்பச்சனின் மும்பை வீட்டுக்கு முன்பாக நூற்றுக்கணக்கான தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்

சிறிலங்காவில் எதிர்வரும் ஜுன் 3ம் நாள் தொடக்கம் 5ம் நாள் வரை நடைபெறவுள்ள இந்திய சர்வதேச திரைப்பட விருதுகள் விழாவில் முதன்மை விருந்தினராக அமிதாப்பச்சன் பங்கேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

“சிறிலங்காவில் நடைபெறும் இந்திய சர்வதேச திரைப்பட விருதுகள் விழாவில் அமிதாப் பங்கேற்கக் கூடாது என்றே நாம் கோருகிறோம்.

தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்களை இழைத்த மகிந்த ராஜபக்ஸ அரசாங்கத்தின் விருந்தாளியாக அவர் பங்கேற்பதை எதிர்ப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறியுள்ளனர்.

அமிதாப்பின் பிரதிக்ஷா பங்களாவில் இருந்து அவரது ஜல்ஸா வீடு வரைக்கும் ஆர்ப்பாட்டகாரர்கள் பேரணியாகச் சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் குழுவொன்று அமிதாப்பையும் இந்திய சர்வதேச திரைப்பட விருதுகள் குழுவின் இரு பிரதிநிதிகளையும் சந்தித்து இந்த விழாவுக்கான அழைப்புகளை நிராகரிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

தமிழர்களின் உணர்வுகள் குறித்து தாம் இந்திய சர்வதேச திரைப்பட விருதுகள் அமைப்பின் நிர்வாகத்துடன் கலந்து பேசி பொருத்தமான முடிவை எடுப்பதாக அமிதாப்பச்சன் ஆரப்பாட்டக்காரர்களிடம் உறுதியளித்துள்ளார்.

கடந்த வாரம் அமிதாப்பச்சன் சிறிலங்காவுக்கு பயணத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை



*Postal Address:*
*P.O. BOX 22 COMO WA 6952 AUSTRALIA*
*Tel: 1300 660 629*
*Web: http://www.australiantamilcongress.com*

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரே அரசியலில் ஆர்வம் காட்டிவந்திருக்கின்றார்கள். அவர்களும் தனித்தனியாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் முயற்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதுவரை காலமும் அமைதியாக இருந்த மக்களையும், இளஞ்சந்ததியினரையும் அரசியலில் ஈடுபட வைத்து எமது தமிழ்ச் சமூகத்தின் ஒருங்கிணைந்த நோக்கத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவது எமது கடமை.

அவுஸ்திரேலிய தமிழ் பேரவை பல அரசியல் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது, எமது அமைப்பினரின் நோக்கம் நிறைவேறுவதற்க்கு எமது பேரவையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையும், பொருள் பலமும் முக்கியமானது என்பது மறுக்கவோ, மறைக்கமுடியாத உண்மை. அதனால் உங்கள் ஒவ்வொருவரையும் எமது பேரவையில் இணைந்து எம்மைப் பலப்படுத்தும்படி வேண்டி நிற்கின்றோம். எமது பேரவையின் எதிர்காலத்தை வழி நடத்தும் பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தவர்களின் கைகளிலும் உள்ளது.

உங்களது உதவி சிறியதாகவோ பெரியதாகவோ இருப்பினும் எமது நீண்ட கால, இடைத்தர கால, குறுகிய கால குறிக்கோள்களை அடைவதற்கு மிக முக்கியமானது.

நீதிக்காகவும் அமைதிக்காகவும் நாம் தொடங்கிய பயணத்தில் உங்களையும் உங்களது நண்பர்களையும் உறவினர்களையும் இணைத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

எமது தேசிய சஞ்சிகைக்கான கட்டுரைகள் செய்திகளை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

newsletter@australiantamilcongress.com

---

## அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை:
## சமாதானத்தையும் நீதியையும் நோக்கிய அறப்போர்

**எம் கொள்கை**

“மக்களால் மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட மக்களின் பேரவையே அவுஸ்திரேலியத் தமிழ் பேரவையாகும். எமது கொள்கையானது நீதியையும் சமாதானத்தையும் அடிப்படையாக வைத்து எமது மக்களின் வளமான, சுதந்திரமான, சமத்துவமான, பாதுகாப்பான அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது மக்களின் ஒருங்கிணைந்த குரலாக ஒலிப்பதுவாகும்.”

**எம் இலட்சியம்**

“அவுஸ்திரேலியத் தமிழ் பேரவை அவுஸ்திரேலிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்களின் ஆக்க பூர்வமான பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும், தமிழர்களுக்கு முக்கியானற்றை வெளிக் கொணர்வதாகவும், அவுஸ்திரேலியப் பண்புகளை நிலைநிறுத்துவதாவும், மற்றைய சமூகங்கள், அரசுகள், அமைப்புக்கள் அனைத்தையும் தமிழர்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் அக்கறைகள், கவலைகளில் ஈடுபடுத்துவதாகவும் அமைவதே எம் இலட்சியம்.”

**எம் குறிக்கோள்**

“எமது குறிக்கோளானது உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகக ஒருங்கிணைந்த குரல் கொடுப்பது, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிய அறிவியலை மக்களிடையே ஏற்படுத்துவது, எமது மக்களின் பாதுகாப்பிற்கும், வளமையான வாழ்விற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது, எமது எதிர்கால சந்ததியினரிற்கு எமது நாட்டில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி எடுத்துக்கூறுவது என்பவையாகும்.”